Philip P. Bliss, 1838-1876



பாமாலை 438 காது குளிரப் பாடுங்கள்

1 காது குளிரப் பாடுங்கள்

கிருபா சத்தியம்;

புத்தி தெளியக் காட்டுங்கள்

திவ்விய வசனம்

வெல்க! சத்திய வேதம்!

வாழ்க! நித்திய வேதம்.

பல்லவி

அமிர்தமே! அற்புதமே!

திவ்விய சத்தியம்

அமிர்தமே! அற்புதமே!

திவ்விய சத்தியம்.

2 நல்ல செய்தியைக் கூறுமே

கிருபா சத்தியம்.

பாவ நாசத்தைக் காட்டுமே

திவ்விய வசனம்,

வான வருஷ மாரி,

ஞானப் பொக்கிஷ வாரி

3 வேத நாயகர் பொழியும்

கிருபா சத்தியம்

ஜீவா மங்கள மொழியும்

திவ்விய வசனம்

இயேசு எந்தனைப் பாரும்,

நித்தம் எந்தனைக் காரும்